**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 395/2025**
**வழக்கு சாட்சி PW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோபாலன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | குணசேகரன் | தொழில் | : | தோட்டக்கலை உதவி இயக்குநர் |
| கிராமம் | : | குருவிகுளம் | வயது | : | 39 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 11.03.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் குருவிகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் குருவிகுளம் தோட்டக்கலைத்துறையில் உதவி இயக்குநராக வேலை செய்து வருகிறேன். 20.01.2023 அன்று அய்யாபுரம் காவல்நிலையத்திலிருந்து மாரிராஜ் என்பவரின் தோட்டத்தில் வாழைமரங்கள், சொட்டு நீர் பைப் சேதமடைந்ததாகவும், அதனை பார்த்து சேதமதிப்பு கொடுக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தார். நான் அந்த இடத்தை பார்வையிட்டு, ரூ.48,430/- சேதம் எனச் சான்று வழங்கினேன். அந்த சேதமதிப்பு சான்று **அ.சா.ஆ.8** ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

20.01.2023 அன்று வேண்டுகோள் கடிதம் கிடைக்கப்பெற்றது. போலீசார் நேரடியாகத் தான் என்னுடைய அலுவலகத்திற்கு வந்து கொடுத்தார்கள். ஒரு வாரம் கழித்து தான் நான் ஆய்வு செய்தேன். வாழைகள் வெட்டப்படும் போது மறுநாள் இலைகள் வாடி விடும் என்றால்

சரிதான். நான் வாழைகள் வெட்டப்பட்டு 15 நாட்கள் கழித்து தான் அந்த இடத்தை போய் பார்வையிட்டேன் என்றால் எனக்கு என்றைய தினம் வாழைகள் வெட்டப்பட்டது என்று தெரியாது. அந்த இடம் யாருக்கு உரிமைப்பட்டது என்று உரிமை ஆவணங்கள் போலீசார் என்னிடம் தரவில்லை.

120 வாழைகள் வெட்டப்பட்டிருந்ததாக போலீசார் சொல்லி நான் அறிக்கையில் குறிப்பிட்டேன் என்றால் சரியல்ல. நான் சேதமதிப்பு எவ்வாறு கணக்கிட்டேன் என்றால் அதற்கான வழிகாட்டி உள்ளது. அன்றைய விலைமதிப்பு கணக்கிட்டு சேதமதிப்பு சான்றிதழ் வழங்கினேன். 120 வாழைகளில் குலை தள்ளிய வாழைகள் எவ்வளவு? முழுமையாக காய்த்த வாழைகள் எவ்வளவு? என்று தனியாக சான்றிதழில் நான் குறிப்பிடவில்லை என்றால் அந்த வாழைகள் அனைத்தும் அறுவடைக்கு தயாராகத் தான் இருந்தது. அதில் ஒரு குலை 15 கிலோ எடை சராசரி இருக்கும். அதன் அடிப்படையில் அன்றைய விலைப்படி சேதமதிப்பு வழங்கினேன். விலைப்பட்டியல் நான் ஆய்வாளரிடம் வழங்கவில்லை என்றால் சரிதான். சான்றில் ஒரு வாழைத்தாரின் விலை ரூ.400/- என்று குறிப்பிட்டுள்ளேன்.

என்னுடன் ஆய்வுக்கு செல்லும் போது வேறு யாரும் வந்தார்களா? என்றால் நானும், கிராம நிர்வாக அலுவலரும் அந்த இடத்திற்கான உதவி தோட்டக்கலை அலுவலரும் சென்றோம். சொட்டு நீர் டேங்க், பிவீசி பைப் என்ன விலை என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எங்கள் அலுவலகத்திலிருந்து சொட்டு நீர் பாசனம் மானியத்தில் பொதுமக்களுக்கு செய்து கொடுப்பதுண்டு, அதனால் அது குறித்து விலை விபரங்கள் எனக்கு தெரியும். வாழைமரங்கள் நிலத்தில் எந்த பக்கத்தில் வெட்டப்பட்டிருந்தது என்றால் ஒரு ஏக்கர் நிலத்தில் பரவலாக வாழைகள் நடப்பட்டிருந்தது. நான்

சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும், நான் போலீசார் கொடுத்த புகைப்படத்தை பார்த்து தவறான சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய சேதமதிப்பு தவறானது என்றால் சரியல்ல. வேண்டுகோள் கடிதத்தினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.13 13:57:09 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 395/2025</u>**

**<u>வழக்கு சாட்சி PW-8</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகேஷ்பாண்டியன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வெள்ளப்பாண்டி | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | ஆராய்ச்சிபட்டி | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 11.03.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் ஆராய்ச்சிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். 31.01.2023 அன்று காலை 11.00 மணிக்கு எதிரி வாசுதேவன் என்பவருக்கு சொந்தமான ேஹாண்டா டிவிஸ்டர் இருசக்கரவாகனத்தை சேர்ந்தமரம் காவல்நிலையத்திற்கு அருகில் வைத்து அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அத்தாட்சியில் நானும், பெருமாள் என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.9** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகார்தாரர் மாரிராஜ் என்னுடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். நான் சேர்ந்தமரத்திற்கு 11.00 மணிக்கு சென்றேன். என் அண்ணன் என்னை அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. காவல்துறையினர் தான் மாரிராஜிற்கு போனில் தகவல் சொன்னார்கள், மாரிராஜ் என்னிடம் சொன்னார். மாரிராஜ் என்னை மட்டும் போகச் சொன்னாரா?

பெருமாளையும் கூட்டிக்கொண்டு போகச்சொன்னாரா? என்றால் பெருமாளையும் அழைத்து செல்ல சொன்னார். பெருமாளை தனியாக போலீசார் அழைக்கவில்லை என்றால் சரிதான். என் ஊரிலிருந்து காலை 07.00 மணிக்கு சேர்ந்தமரத்திற்கு கிளம்பினேன்.

சேர்ந்தமரம் செல்வதற்கு ஒரு மணிநேரம் ஆகும். என்னுடைய அண்ணன் காலை 06.00 மணிக்கு தகவல் சொல்லியிருப்பார். நான் என்னுடைய பைக்கில் சென்றேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. சேர்ந்தமரம் பஸ்ஸ்டாண்ட்டிலிருந்து சேர்ந்தமரம் காவல்நிலையம் எந்த திசையை பார்த்து உள்ளது என்றால் தென்திசையை பார்த்து உள்ளது. சேர்ந்தமரம் காவல்நிலையத்திலிருந்து எதிரியின் பைக் எவ்வளவு தூரத்தில் இருந்தது என்றால் ஒரு 400 மீட்டர் தூரத்தில் இருந்தது. மண் தரையில் இருந்ததா? தார் ரோட்டில் இருந்ததா? என்றால் ஞாபகமில்லை. கடைகள் இருந்ததா? என்றால் இருந்தது. அய்யாபுரம் போலீசார் நான் செல்லும் போது அங்கு இருந்தார்கள். எஸ்.ஐ, ஆய்வாளர் இல்லை என்றால் சரிதான். போலீசார் தான் வண்டியை என்னிடம் அடையாளம் காண்பித்தார்கள். புகார்தாரர் என்னுடன் பிறந்தவர் என்பதினால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.13 13:57:19 +0530